**உடனடி வெளியீட்டுக்காக:**

## இலங்கை: தடுத்து வைத்தல் மற்றும் உதவிகளுக்கான கட்டுப்பாடுகளை முடிவுறுத்தல்

***சண்டைகளிற்கிடையில் அகப்பட்டுள்ள தமிழ் பொதுமக்களுக்கு நிவாரணம் மற்றும் நடமாடும் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது***

(நியூயோர்க், டிசம்பர் 23, 2008) - இலங்கை அரசாங்கம் வன்னியில் சண்டை நடைபெறும் வடபகுதியிலிருந்து தப்பி வரும் பொதுமக்களை எதேச்சாதிகாரமான வகையில் தடுத்து வைப்பதை நிறுத்துவதுடன் மனிதநேய தொண்டரமைப்புகள் அப்பகுதிகளுக்கு மீள்திரும்பி அவசரமாக தேவைப்படுகின்ற உதவிகளை உடன் வழங்குவதற்கு அனுமதிக்க வேண்டுமென, மனித உரிமைகள் கண்காணிப்பகம் இன்று வெளியிட்ட அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

”முற்றுகையிடப்பட்டு, இடம்பெயர்ந்து மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருத்தல்: இலங்கையின் வன்னிப் பிரதேசத்தில் மக்களின் அவலம்” எனும் தலைப்பிலான 49 பக்க அறிக்கை வன்னியின் மோதல் வலயங்களுக்குள் அகப்பட்டுள்ள 230,000 - 300,000 வரையிலான இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களுக்கான இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பை தெரிவிக்கிறது. மனிதாபிமான உதவிகள் மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்குமான கடுமையான பற்றாக்குறைக்கு அங்குள்ள மக்கள் முகம் கொடுக்கின்றனர். பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து தப்பி வந்த தனிப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள முகாம்களில் மோசமான நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.”

”அரசாங்கம், ஐ.நா மற்றும் ஏனைய தொண்டரமைப்புகளை வன்னியை விட்டு வெளியேற உத்தரவிட்டதனால் இலட்சக்கணக்கான மக்கள் உதவிகளுக்கான மட்டுப்படுத்தப்படுத்தல்களுடன் யுத்தப் பிரதேசங்களில் அகப்பட்டுக் கொண்டுள்ளனர்,” என்று ஆசிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளரான பிராட் அடம்ஸ் கூறினார். ”பாதிப்படைந்திருக்கும் இம்மக்களை மேலும் அவமதிக்கும் வகையில் சண்டைகளிலிருந்து தப்பி வந்த மக்கள் இராணுவத்தால் நடாத்தப்படும் சிறை முகாம்களில் கால வரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்” என்று அவர் மேலும் கூறினார்.

இந்த அறிக்கை, ஒக்டோபரிலிருந்து டிசம்பர் 2008 வரையும் இலங்கையின் வடபகுதியில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையிலானதாகும். இதற்காக ஐக்கிய நாடுகளின் முகவரமைப்புகளின் அதிகாரிகள் மற்றும் மனிதநேய ஸ்தாபனங்கள், இராஜதந்திரிகள், மதத்தலைவர்கள் மற்றும் மோதல்களினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுடனும் நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. அரசாங்கத்தின் முழுமையான கட்டுப்பாட்டினால் வன்னியின் போர்ப்பகுதிகளை சுயாதீனமான அவதானிப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அணுகுவதற்கு முடியாமலுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் டிசம்பர் 12 இல் வெளியிட்ட, ”வன்னிக்குள் அகப்பட்டு மோசமாக நடாத்தப்படும் பொதுமக்கள்: வன்னியில் மக்களை துஷ்பிரயோகிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள்”, எனும் தலைப்பிலான 17 பக்க அறிக்கை பிரிவினைவாத இயக்கம் அதன் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களைக் கையாளும் மோசமான முறைகள் பற்றி அறிக்கையிடுகிறது. (http://www.hrw.org/en/reports/2008/12/15/trapped-and-mistreated-0) இவ்வறிக்கை, தமிழீழ விடுதலைப் புலிகள் அதன் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் யுத்தப் பிரதேசங்களிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு எவ்விதம் அனுமதி மறுக்கிறது என்பதையும், எவ்விதம் பொதுமக்களின் வாழ்க்கையை ஆபத்திலிடும் வகையில் கட்டாய ஆட்சேர்ப்பை அதிகரித்துள்ளது பற்றியும் மற்றும் கட்டாய வேலைகளில் ஈடுபடுத்துகிறதென்பதையும் விபரிக்கிறது.

செப்டெம்பரில் அரசாங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உள்ளூர் ஊழியர்களைக் கொண்ட கரித்தாஸ் நிறுவனங்களை மட்டும் செயற்பட அனுமதித்து, ஏனைய அனைத்து ஐக்கிய நாடுகள் மற்றும் மனிதநேய தொண்டரமைப்புகளிடம் அவற்றின் ஊழியர்கள் மற்றும் செயற்பாடுகளை வன்னியிலிருந்து மீளப்பெறுமாறு உத்தரவிட்டது. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வு மனிதநேய தேவைகள் பலவற்றிற்கான பற்றாக்குறைகளை விவரிக்கிறது: இப்பகுதிகளில் அகப்பட்டுள்ள மக்களுக்கான உணவு விநியோகம் குறைந்த பட்சத் தேவையின் 40 வீதமானளவில் குறைவாக இருந்தது, பல்லாயிரக்கணக்கான மக்கள் பிளாஸ்டிக் கூடாரங்களுக்கான தேவையினைக் கொண்டிருந்ததுடன் மற்றும் சுகாதார வசதிகளும் முற்றிலுமாக இருக்கவில்லை. நவம்பரில், நிஷா சூறாவளி இடம்பெயர்ந்த 60,000-70,000 மக்களின் பிளாஸ்டிக் கூடாரங்களை சேதமாக்கியது. ஆயினும் தொண்டரமைப்புகள் கூடாரங்களுக்கு அவசியமான பொருட்களை வன்னிக்குள் கொண்டு வருவதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்தது. (http://www.hrw.org/en/news/2008/11/29/sri-lanka-allow-aid-groups-help-cyclone-victims)

மார்ச் 2008 இலிருந்து, வன்னியை விட்டு வெளியேறுகின்ற அனைத்து தமிழ் மக்கள் அதேபோன்று இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் மீள்திரும்பும் அகதிகள் ஆகியோர் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்கள் என்பதின் பேரில் தடுத்து வைக்கப்பட்டனர். சுமார் ஆயிரம் பொதுமக்கள் இவ்விதமாக இனங்காணப்பட்டு மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் ”நலன்புரி நிலைய” முகாம்களில் இராணுவக் காவலுடன் தடுத்து வைக்கப்பட்டனர். அரசாங்கத்தின் இக்கொள்கை இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகிறது. முகாம்களின் நிலைமைகள் போதுமான இடவசதியின்மை, சுகாதார வசதிகளின்மை மற்றும் மனிதாபிமான உதவிகளின் மட்டுப்படுத்தல்களுடன் மிகவும் மோசமானதாக இருந்தது.

”வன்னியை விட்டு வெளியேறும் பொதுமக்களுக்கான அரசாங்கத்தின் நலன்புரி நிலையங்கள், உருமறைப்பு செய்யப்பட்ட மோசமான சிறைச்சாலைகளே” என்று அடம்ஸ் கூறினார். ”தமிழீழ விடுதலைப் புலிகளின் துஷ்பிரயோகங்களிலிருந்து தப்புவதற்காக ஓடிவந்த பலரே இப்பொழுது அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும். தடுத்து வைக்கும் இக்கொள்கை அரசாங்கம் உதவி செய்யவேண்டிய இம்மக்களை மேலும் வருத்துவதாக அமைகிறது.”

தொண்டரமைப்புகளை வெளியேறிச் செல்வதற்கு கட்டளையிட்டதன் மூலம் உருவாக்கப்பட்ட பெரும் மனிதநேய உதவிகளுக்கான இடைவெளியை நிரப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் அது தெரிவிப்பது போலன்றி மிகவும் திருப்தியற்ற நிலையிலேயே இருப்பது மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வின்போது கண்டறியப்பட்டது. வன்னியில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடமிருந்தான தகவல்கள் உட்பட கிடைக்கப் பெற்ற தகவல்கள், பொதுமக்கள் உணவு, இருப்பிடம், தண்ணீர் மற்றும் சுகாதார பொருட்களின் வழங்கல்கள் மற்றும் ஏனைய உயிர்காக்கும் சேவைகளின் பெரும் பற்றாக்குறைக்கு முகங் கொடுப்பதை சுட்டிக்காட்டுகின்றன.

”மனிதாபிமானத் தேவைகளுக்காக வன்னியிலுள்ள அரசாங்க அதிகாரிகள் தொடர்ச்சியாக எச்சரிக்கைகள் விடுத்தும் கூட அரசாங்கத்தின் வாக்குறுதிகள் வெறுமையாக, யதார்த்த ரீதியில் களநிலவரங்களில் பிரதிபலிக்காதவையாகவே உள்ளன”, என்று அடம்ஸ் கூறினார்.